# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம், புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை, சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
தொலைபேசி எண் 24312841.

**வழக்கு எண். 14923/விசாரணை/2009**

**<u>விசாரணை நடைபெற்ற நாள். 25.9. 2009</u> (திருவண்ணாமலை)**

**முன்னிலை** **திரு தி சீனிவாசன், எம்.எஸ்சி.**
**மாநில தகவல் ஆணையர்.**

**மனுதாரர்:** திரு . ஏ.எல். மணி
94, குமரன் தெரு
திருவத்திபுரம் மற்று.ம் அஞ்சல்
திருவண்ணாமலை மாவட்டம்

**பொது அதிகார அமைப்பு:** பொதுத் தகவல் அலுவலர்
இணை ஆணையர்,
இந்து சமய அறநிலயத் துறை அலுவலகம், வேலூர் 9

பொதுத் தகவல் அலுவலர்
இணை ஆணையர்,
இந்து சமய அறநிலயத் துறை அலுவலகம், விழுப்புரம்

மனுதாரர் . ஏ.எல். மணியும் பொது அதிகார அமைப்பின் சார்பாக விழுப்புரம் இந்து சமய அறநிலயத் துறை அலுவலக பொதுத் தகவல் அலுவலரும் இன்று (25.9.09) இவ்வாணையத்தால் திருவண்ணாமலையில் நடத்தப்பட்ட விசார**ணைக்கு வந்திருந்தனர்.**

மனுதாரர் 9.4.07 அன்று 27 இனங்களில் தகவல் கேட்டு இணை ஆணையர், இந்து சமய அறநிலயத் துறை அலுவலகம் வேலூர் விண்ணப்பித்துள்ளார். மனுதாரரின் மனு 10.4.07 அன்று விழுப்புரம் இந்து சமய அறநிலயத் துறை அலுவலக இணை ஆணையருக்கு உரிய தகவல்களை அளிக்குமாறு அனுப்பப்பட்டுள்ளது. அதன் பிறகு மனுதாரர் பல நினைவூட்டுக் கடிதங்களை அனுப்பி உள்ளார். இவ்வாணையத்திற்கு 17.4.07 அன்று மேல் முறையீடு செய்துள்ளார். இவ்வாணையம் 13.6.07 அன்று மனுதாரருக்கு உரிய தகவல்களை தருமாறு விழுப்புரம் இந்து சமய அறநிலயத் துறை அலுவலக இணை ஆணையருக்கு ஆணையிடப்பட்டுள்ளது. தகவல் ஏதும் பெறாததால்

இவ்வாணையத்திற்கு 30.6.09 அன்று மேல் முறையீடு செய்துள்ள மனு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசராணையில் மனுதாரர் அனைத்து இனங்களுக்கும் . தகவல் தராத சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்தார். விசாரணையில் மனுதாரரிடம் தகவல் பெறாதது குறித்து விசாரிக்கப்பட்டது. மனுதாரருக்கு ஆவணங்களிலிருந்து தகவல் தரப்பட்டது என்றும் ஆவணங்களில் முரண்பாடாக சில தகவல்கள் இருப்பதாக தெரிவித்தார். தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி அலுவலக ஆவணங்களில் இருந்து தகவல்கள் தரப்பட்டதாகவும் ஆவணங்களில் தவறு இருப்பின் அது குறித்து இவ்வாணையம் விசாரிக்க இயலாது என்றும் தெரிவிக்கப்பட்டது. மனுதாரரின் மனு 9.4.07 என்று தேதியிட்டு அந்த மனு சம்பந்தப்பட்ட அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டிருந்தும் 13.11.08 வரை தகவல் தரப்படாதது குறித்து விசாரிக்கப்பட்டது. இது குறித்து 3.7.07 அன்று மனுதாரருக்கு தகவல் தரப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. விசாரணையில் 3.7.07 தேதியிட்ட கடிதம் பார்வையிட்டதில் தகவல் ஏதும் தரப்படாமல் ஒரு சில கருத்துக்கள் தரப்பட்டுள்ளன. மனுதாரர் கேட்டுள்ள 27 இனங்களுக்கும் சுமார் 19 மாதங்களாக தகவல்கள் தரப்படவில்லை என்று முடிவு செய்து கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

மனுதாரருக்கு உரிய தகவல்களை 19 மாதங்கள் தாமதமாக தகவல் தந்ததற்கு சம்பந்தப்பட்ட பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச்சட்டத்தின் பிரிவு 20 (1) ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கு விளக்கம் கேட்டு அவ்விளக்கத்தினை இவ்வாணயத்திற்கு இவ்வாணை கிடைத்த 30 நாட்களுக்குள் அனுப்பி வைக்குமாறு இந்து சமய அறநிலயத் துறை ஆணையர், சென்னை.34 கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**மாநில தகவல் ஆணையம்**

**ஒப்புதல் அளிக்கப்பட்ட நாள் 15.9.09**

ஆணையத்தின் ஆணைப்படி

உதவிப் பதிவாளர்

ஆணையர்,
இந்து சமய அறநிலயத் துறை,
சென்னை.34

பொதுத் தகவல் அலுவலர்,
இந்து சமய அறநிலயத் துறை இணை ஆணையர்
அலுவலகம்
விழுப்புரம்

பொதுத் தகவல் அலுவலர்,
இந்து சமய அறநிலயத் துறை இணை ஆணையர்அலுவலகம்,
வேலூர்

திரு . ஏ.எல். மணி
94, குமரன் தெரு
திருவத்திபுரம் மற்று.ம் அஞ்சல்
திருவண்ணாமலை மாவட்டம்